# 1.4 கடவுளே அறிவின் ஊற்று




## படைப்பின் வளர்ச்சிக்கு உதவுவோம்



(ஞானம்) அதன் வழியைத் தெரிந்தவர் கடவுள்; அதன் இடத்தை அறிந்தவரும் அவரே! ஆண்டவர்க்கு அஞ்சுங்கள்; அதுவே ஞானம்; தீமையை விட்டு விலகுங்கள்; அதுவே ஞானம் (யோபு 28:23,28)

ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும் விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே. (நீதிமொழிகள் 2.6)

பன்னெடும் காலமாகவே இஸ்ரயேலரின் வாழ்வில் ஓர் ஆழ்ந்த நம்பிக்கை நிலவி வந்தது. தங்கள் வரலாற்றில் அவர்கள் பெற்று வந்த பட்டறிவு(அனுபவம்) இந்த நம்பிக்கை மேலும் உறுதி பெற பேருதவியாய் இருந்தது. ‘அறிவு’, ‘ஞானம்’ என்பனவற்றின் தொடக்கம் மற்றும் அதன் ஊற்று ஆண்டவராகிய கடவுளே என்பதுதான் அந்த நம்பிக்கை.



ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்
(திருப்பாடல் 104:24)

மேற்காணும் வசனங்கள் இவற்றை நமக்கு உணர்த்தக் கூடியவை அல்லவா?



இலவச விநியோகத்திற்காக

நீங்கள் பள்ளியில் கற்கும் மாணவர் அல்லவா? நீங்கள் உங்கள் கடந்த காலத்தை மீட்டிப் பார்க்க முனைவீர்களாயின் கல்வித் துறையில் எந்த அளவு அறிவு வளத்தைப் பெற்றுள்ளீர்கள் என்பது ஐயப்பாடு இன்றி உங்களுக்குத் தெளிவாகும். நமது அறிவை வளப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் நமது உலகம் திறந்தவோர் புத்தகமாகவே உள்ளது. நமது அறிவை கூர்மைப்படுத்தத் தேவையான வளம் மற்றும் பிற ஏதுக்கள் நமக்கு எட்டும் தூரத்திலேயே உள்ளன. நூலகம், தொடர்பாடல் நுணுக்கம், தொழில்நுட்ப வளம் ஆகியன இவற்றில் அடங்கும். இருப்பினும் இவற்றை எல்லாம் கடந்து உயர்ந்து நிற்கும் அறிவாற்றல் அறிவின் ஊற்றாகிய கடவுளிடம் உள்ளது. அவரிடம் இருந்தே 'அறிவாற்றல்' பெருக்கெடுத்து வருகின்றது என்பதை நமது இறைப்பற்று நமக்கு உணர்த்துதல் வேண்டும்.

எனவே, அவரில் தங்கி வாழ வேண்டும் என்பதை நாம் உணரும் பட்சத்தில், அவரின் படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவும் வண்ணம் நாம் பங்களிப்புச் செய்யலாம். திருவிவிலியத்தில் படைப்பு தொடர்பான தகவல்களை வாசிக்கும் பொழுது, 'நன்மை தீமை' மற்றும் அவற்றின் விளைவுகளைத் தோட்டத்தின் நடுவிலுள்ள மரத்தின் மூலம் அறிந்தோம். இதன் மூலம் கடவுளே அறிவாற்றலின் அடிப்படை ஆனவர் என்பது தெளிவாகிறதல்லவா?

மனுக்குலம் அறிவின் உச்சத்தில் இருப்பினும், அனைத்து உலக வளங்களைக் கொண்டதாய் இருப்பினும், நிதானித்து அறிந்து செயலாற்றும் கடவுளின் அறிவாற்றலைப் பொறுத்தவரை நாம் வளம் குன்றியவர்களே!



வாசிக்கவும்

1 அரசர்கள் 3

தாவீதின் பின்பு அவரது மகன் **சாலமோன்** அரசாட்சி பொறுப்பேற்றார். இப்பெயரின் பொருள் 'கடவுள் அன்பு கூர்ந்தவர்' என்பதாகும். அரசராக பொறுப்பேற்ற சாலமோன், கிபியோன் என்னும் இடத்தில் கடவுளுக்கு பலியிட்டு வழிபட்டார். அப்பொழுது ஓர் கனவு கண்டார். அக்கனவின் மூலம் கடவுளிடம் வரம் ஒன்று பெற்றார். 'உனக்கு என்ன வேண்டும்?' என்று சாலமோனிடம் கடவுள் கேட்டார். மாணவரே! நீங்கள் கடவுளிடம் கேட்க விரும்புவது என்ன?

ஓர் அரசர் எனும் வகையில் அவர் நிறைவான நிலையில் இருந்திருக்கலாம்; அல்லது ஏதேனும் தேவைகள் இருந்திருக்கலாம். சாலமோன் அரசர் கடவுளிடம் ஓர் வரம் கேட்டார். அதனை கடவுள் மட்டுமே வழங்கக் கூடுமென அவர் நம்பினார். கடவுள் சாலமோன் அரசரை அதியுச்ச அரச நிர்வாகியாகப் பணி அமர்த்தி இருந்தார். மக்களை நேரிய வழியில் நடத்தத் தேவையான ஆற்றல் அவரிடம் இருந்திருக்கலாம். எனவே சாலமோன் கடவுளிடம் தன்னலமற்ற ஓர் வரம் கேட்டார்.



இலவச விநியோகத்திற்காக



வாசிக்கவும்.
1 அரசர் 3:7 - 9



அவர் கடவுளிடம் கேட்ட வரத்தின் சுருக்கம்: *'உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை, தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்கு தந்தருளும்'* என்பதாகும். கடவுள் அவருக்கு வழங்கிய பெரும் பணியான அரசாட்சியை திறம்பட நிர்வகிக்கத் தேவையான அறிவாற்றலையே அவர் வரமாகக் கேட்டார்.

**கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவ மிகவும் தேவையானது நன்மை மற்றும் தீமையைப் பகுத்தறியும் அறிவாற்றலே.** சாலமோன் அரசர் கேட்ட வரத்தைக் குறித்து கடவுள் மனம் மகிழ்ந்தார். இவ்வரத்துடன் சிறப்பான புத்தியையும் கடவுள் சாலமோனுக்கு வழங்கினார்.



"உன் தந்தை தாவீதை போல் நீயும் என் வழிகளில் நடந்து, என் நியமங்களையும் விதிமுறைகளையும் கடைப்பிடித்து வந்தால், உனக்கு நீண்ட ஆயுளையும் வழங்குவேன் என்றார்".

(1 அரசர் 3 : 14 - 28)

கடவுள் வழங்கும் ஞானத்தைப் பயன்படுத்தும்பொழுது, இறை விருப்பப்படி நடத்தல் மற்றும் கீழ்ப்படிவு என்பவற்றை கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இஸ்ரயேலின் அரசராகத் திருப்பொழிவு பெறுபவர் தனக்கென ஓர் நீதிச் சட்டப் பிரதியை வைத்துக் கொண்டு, அதன்படி நீதி நெறி வழுவாது மக்களை வழிநடத்த வேண்டும். கடவுள் வழங்கிய ஞானத்தின்படி, சாலமோன் வழங்கிய தீர்ப்பு இன்றுவரை பலராலும் அறியப்பட்ட ஒன்றாகும்.

காலப்போக்கில் சாலமோன் தன் வாழ்வில் கடவுளுக்கு அஞ்சி நடக்கவில்லை. ஞானத்தின் பெறுமதி குறித்து சபை உரையாளர் 4 மற்றும் 8 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளவற்றை வாசித்தறியவும்.

**பயிற்சி**

1. வகுப்பில் உள்ள மாணவர் சிறு குழுக்களாகப் பிரிந்து இவ்விரு அதிகாரங்களில் உள்ள படிப்பினைகளை ஆய்வு செய்யவும். இன்றைய வாழ்வுச் சூழலுக்கு அவை பயனுள்ளதாய் அமைந்துள்ளதா என்று பார்க்கவும்.
2. ஓர் தந்தை தன் மகனுக்கு வழங்கும் புத்திமதியின்படி, ஞானத்தின் பயனை ஆய்வு செய்யவும்.
3. ஞானத்தின் வழியாக நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம் என்ன?
4. ஞானத்தை பயன்படுத்தி கடவுளின் படைப்பின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவலாம் என்பதை விளக்கவும்.



வாசிக்கவும்
1 கொரி 1:20-25
(சிறப்பாக வசனம் 25 காண்க. )

***'மனித ஞானத்தை விட கடவுளின் மடமை ஞானம் மிக்கது; மனித வலிமையை விட அவருடைய வலுவின்மை வலிமை மிக்கது.'*** *(1கொரி1.25)*

இதன்படி கடவுளின் ஞானம் நிகரற்றது என்பது தெளிவு. அவரின் வலிமை ஒப்புயர்வற்றதாகும் என்பதும் புலப்படுகின்றது.

பவுல் அடிகளார் வாழ்ந்த கிரேக்க உலகில், அரிஸ்டோடில், பிளேட்டோ, மற்றும் சாக்ரடீஸ் போன்ற மெய்யியலாளர் மிகப் பெரும் அறிவு புரட்சி செய்திருந்தனர். அவர்களின் சிந்தனை வழியின்படி இறைப்பற்று மூலம் கிட்டும் மீட்பைவிட அறிவின் உச்சத்தை அடைவதன் மூலம் பெறும் வெளிச்சமே மீட்பின் வழி எனத் தெளிந்தனர்.

அதேபோன்று யூத சமூகத்தின் இரபிமார் கருத்துப்படி, நீதிச்சட்டம் சார்பாக வழக்கில் இருந்த விளக்கங்கள் கடவுளை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிடும் அளவிற்கு வலுவாக இருந்தது. நீதிச் சட்டத்தை வழங்கியவர், வழங்கப்பட்ட நீதிச் சட்டத்தை விடவும் உயர்ந்தவர் அல்லவா? இஸ்ரயேலர் காலப்போக்கில் இப்பேருண்மையை மறந்து செயல்பட ஆரம்பித்தனர்.



இலவச விநியோகத்திற்காக

இன்று நாம் வாழும் சமூகத்தில் தீமையை நியாயப்படுத்தும் முயற்சியில் கற்றறிந்தோரே தயங்காது முன் நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளதல்லவா? தீமையை நிலைநிறுத்த திருவிவிலியத்தை மற்றும் ஏனைய சமய நூல்களை மேற்கோள் காட்ட முயலுவதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் அல்லவா? இதுபோன்ற முயற்சிகளை பவுல் அடிகளார், ஆண்டவர் இயேசுவின் செயல்பாட்டை எடுத்துக் காட்டி, முறியடிக்க முயல்வதை நாம் காணக்கூடியதாக உள்ளதல்லவா?
ஆண்டவர் இயேசுவின் அமைதியான நீதி நிறைந்த, எளிமையான வாழ்வு முறை கடவுளின் ஞானத்தை நமக்கு எடுத்துக் காண்பிக்கின்றது.

***ஆண்டவர் இயேசு, இறையரசு சார்பாக புரிந்த செயல்பாடுகளில் இரண்டைக் காண முயல்வோம்.***

**யோவான் 8:1-11**

ஓர் விலைமாதை நடுத்தீர்வு செய்து அதன் மூலம் அவளை கல்லெறிந்துக் கொல்ல, ஆண்டவர் இயேசுவிடம் கொண்டு வந்தனர். அவரோ மிகவும் ஞானமாகத் தீர்ப்பளித்தார். இப்பகுதியை வாசிக்கவும்.

**லூக்கா 20:20-26**

சீசருக்கு (இராயனுக்கு) வரி செலுத்தலாமா என அவரிடம் கேட்டனர். ஆண்டவர் இயேசு அவர்களிடம் ஓர் காசைக் காட்டும்படிக் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வை வாசித்துப் பாருங்கள். இயேசுவின் தீர்ப்பில் காணப்பட்ட ஞானத்தின் உச்சத்தை உங்களால் அறிய முடிகின்றதா?

காசில் பொறிக்கப்பட்டுள்ள சாயல் சீசருடையது. அப்படியானால் அவை சீசருக்குத்தானே சொந்தம். இந்தப் பகுதியில் நேரிடையாகச் சொல்லப்படாதவோர் உண்மை உள்ளது. நீங்கள் யாருடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறீர்கள்? கடவுளின் சாயலில் அல்லவா? எனவே, நீங்கள் சீசருடையவர்கள் அல்லர்; கடவுளுடையவர்கள் என்றல்லவா தீர்ப்பு வழங்கி இருக்கிறார்.

எனவே, ஆண்டவர் இயேசுவின் வழியில் நாம் கடவுளின் ஞானத்தில் ஒவ்வொரு நாளும் வளர வேண்டியவர்களாய் இருக்கிறோம்.



*இலவச விநியோகத்திற்காக*



குழந்தையும் (இயேசு) வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது. (லூக்கா 2:40)

அறிவிலும் உடலிலும் வளரும் உங்களுக்கு இவ்வுண்மை மிகவும் பயனுள்ளதாய் இருக்கும். நீங்கள் செய்யும் அனைத்துப் பணிகளிலும் கடவுளை சார்ந்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். கடவுளின் ஞானத்தைப் பெற இதுவே வழியாகும். நீங்களும் கடவுளின் படைப்பிற்கு உள்ளானவர் ஆவீர்கள். எனவே, நீங்கள் பெறும் ஞானத்தை நன்மைக்காக மட்டுமே பயன்படுத்தி அதன் மூலம் கடவுளின் ஏனைய படைப்புக்களின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்பது உங்களுக்குத் தெளிவாகப் புரிகிறது அல்லவா?

**செயல்பாடு**

*1* *ஓர் வரம் கேட்டு அதனைப் பெறும் வாய்ப்பு கிட்டினால், இன்றைய வாழ்வுச் சூழலில் நீங்கள் என்ன கேட்பீர்கள்? அவ்வரத்தை கடவுளின் ஏனைய படைப்புக்களின் வளர்ச்சிக்கு உதவும் வண்ணம் எவ்விதம் பயன்படுத்து வீர்கள்?*

*2* *கடவுளின் ஞானத்தை ஓர் மாணவர் என்னும் வகையில் எவ்வாறு புரிந்து கொண்டுள்ளீர்கள்?*

*3* *சாலமோன், தான் பெற்ற ஞானத்தை எவ்விதம் பயன்படுத்தினார் என்பதை உங்கள் ஆசிரியரின் உதவியுடன் திறனாய்வு செய்யவும்.*